S.C.No: 350/2025

Dated : 10.01.2026

Prosecution PW 1 திரு.கிருபானந்தம்

Accused A1,A3,A4,A5present. A2 died

குறுக்கு விசாரணை :

எனக்கு அரசியல் தொழிலா என்றால் இல்லை. கொத்தனார் தொழில். சம்பவ காலத்தில் திருவையாறு பேரூராட்சியில் 5 வது வார்டு கவுன்சிலராக இருந்தேன். திமுக கட்சி சார்பாக பேரூராட்சியில் தேர்தலில் போட்டியிட்டேன். நான் அரசியலில் இருப்பதால் எங்கள் ஊரில் எனக்கு எதிராக விரோதிகள் உள்ளனர் என்றால் சரியல்ல. கவுன்சிலராவதற்கு முன்பு திமுக அரசியல் கட்சியில் 30 வருடமாக இருந்துள்ளேன். திருவையாறு ஐயாறப்பர் கோவில் தர்மபுரம் ஆதினம் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது. தர்மபுர ஆதினத்தில் நிர்வாக அலுவலர்கள் உள்ளார்கள். எத்தனை பேர் என்று தெரி யாது. ஐயாறப்பர் கோவிலும், விநாயர் கோவிலும் தனித்தனி என்றால் சரியல்ல. விநாயகர் கோவில் தர்மபுர ஆதினத்திற்கு கட்டுப்பட்டது. நான் பேரூராட்சி வார்டு கவுன்சிலராக இருந்துகொண்டு கோவில் குளத்தை மீன்பிடி குத்தகை எடுக்கமுடியாது என்றால் தெரியாது. மீன்பிடி குத்தகை எடுக்க நான் மாவட்ட ஆட்சியரிடம் முன் அனுமதி எதுவும் பெறவில்லை. மீன்பிடி குத்தகைக்கு ஏல நோட்டீஸ் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. மீன்பிடி குத்தகை எடுத்ததற்கு எனக்கு கோவில் நிர்வாக ஒப்புகை ரசீது வழங்கியது. ஒப்புகை ரசீதை போலிசார் விசாரணையில் கொடுக்கவில்லை. ஏலத்தில் நான் கலந்து கொண்டபோது கோவில் நிர்வாகிகள் 10,15 நபர்கள் இருந்தார்கள். அழைப்பிதழ் இல்லாமல் ஏலத்தில் கலந்துகொள்ள முடியுமா என்றால் முடியும். 1 வது எதிரி துளசிராமன் கோவில் குளத்தை மீன் பிடிப்பதற்காக எந்த காலத்திலும் ஏலம் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1 வது எதிரி எடுத்துள்ளார். 2 வது எதிரி செல்வத்தின் பெயரில் எடுப்பார். ஏலத்தில் நானும், என்மகனும், அப்புசாமியும், அப்புசாமியின் மகனும் என் சார்பாக ஏலத்தில் கலந்து கொள்ள சென்றோம். அங்கு 15 நபர்களுக்கு மேல் ஏலத்தில் கலந்துகொண்டார்கள். ஏலத்தில் போலிஸ் பாதுகாப்பும் இருந்தது. ஏலத்தில் கலந்துகொள்ள ரூ.1000/- முன் பணம் கட்டுவோம். அப்பாசாமியோ, அவரது மக னோ, என் மகனோ முன் பணம் எதுவும் கட்டவில்லை. எங்கள் தெருவில் நான் மட்டும்தான் முன்பணம் கட்டினேன். யார் யார் முன்பணம் கட்டினார்கள் என்று தெரியாது. அன்றைய தினம் எத்தனை குளம் ஏலத்திற்கு வந்தது என்று தெரியாது. முன் பணம் கட்டாதவர்கள் ஏலத்தில் கலந்துகொள்ள முடியாது என்றால் சரிதான். ஏலம் நடக்கும்போது சலசலப்பு நடந்ததாக கோவில் நிர்வாகத்திடம் புகார்கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. ஏலத்தின்போது சலசலப்பு ஏற்பட்டபோது கோவில நிர்வாகத்தினர் போலிசாரிடம் முறையிட்டு நடவடிக்கை எடுக்க சொல்லவில்லை. அங்குள்ள பொது மக்களே

பேசி தீர்த்து வைத்தனர். பேசி தீர்த்திய நபர்களின் பெயர் தெரியாது. ஏலம் விட்ட உடனே பணத்தை கட்டிவிடவேண்டும். நான் ஏலம் எடுக்க ரூ.75,000/- பணம் எடுத்து சென்றேன். 1 வது எதிரியிடம் ரூ.20000/- பணம் கொடுத்ததற்கு எழுத்துமூலமாக எழுதி வாங்கவில்லை. ஏலம்ட எடுத்தவர் உள்குத்தகைக்கு விடலாமா என்றால் ஏலம் எடுத்தவர் விடுவார். அதற்கு கோவில் நிர்வாகம் அனுமதிக்குமா என்றால் எனக்கு தெரியாது. 1 வது எதிரி, 2 வது எதிரியின் பெயரில் ஏலம் எடுத்தார் என்றுதான் புகார் கொடுத்துள்ளேன். என்னை மருத்துவமனைக்கு ஓட்டல் கடைக்காரர் அ.சா.3 சதிஷ்குமார் அழைத்துச்சென்றார். அ.சா.5 என் மகன். மருத்துவமனைக்கு இரவு 8.42 மணிக்கு அழைத்து செல்லப்பட்டேன். மருத்துவமனையில் நான் சேரும்போது நிதானத்தில்தான இருந்தேன். மருத்துவரிடம் எனக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று சொன்னேன். நான் மருத்துவமனைக்கு சென்றவுடனே சிகிச்சை ஆரம்பித்தார்கள். நான் மருத்துவமனையில் தூங்கவில்லை. போலிசார் மருத்துவமனைக்கு இரவு 10.00 மணிக்கு வந்தார். அப்போது என்னுடன் என் மகனும், அ.சா.3 சதிஷ்குமாரும் இருந்தார்கள். போலிசாரிடம் நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் என்மகனும், சதிஷ்குமாரும் சாட்சி கையெழுத்து போட்டார்களா என்றால் இல்லை. போலிசார் நான் சொல்ல சொல்ல புகார் வாக்குமூலத்தை எழுதினார். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் 1 வது எதிரி , 2 வது எதிரியின் பெயரில் குளத்தை ஏலம் எடுத்ததாக உள்ளதா என்றால் இல்லை. மருத்துவரிடம் 24.08.2023 ஆம்தேதி இரவு 7.30 மணியளவில் திருவையாறு விலாங்குடி மெயின் ரோடு பகுதியில் அடையாளம் தெரிந்த 6 ஆண் நபர்களால் தாக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளேனா என்றால் இல்லை. அ.சா.3 ன் ஓட்டல் திருவையாறு அரியலூர் மெயின் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். திருவையாறு விலாங்குடி ரோடு என்பது வேறு, திருவையாறு அரியலூர் மெயின் ரோடு வேறு என்றால் சரியல்ல. விலாங்குடியை தாண்டிதான் அரியலூர் செல்லவேண்டும், இரண்டும் ஒரே ரோடுதான். போலிஸ் விசாரணையில் அரியலூர் மெயின் ரோடு என சொல்லியுள்ளேன் என்றால் விலாங்குடி மெயின் ரோடு என்று சொல்லியுள்ளேன். எடைமேடைக்கும், அசா.3 சதிஷ்குமாரின் ஓட்டலுக்கு இடையே சுமார் 100 அடி தூரம் இருக்கும். சம்பவம் ஓட்டலில் நடந்தது. ஓட்டலுக்குள்ளே நாங்கள் நான்கு நபர்கள் இருந்தோம். ஓட்டலுக்கு வெளியே சுமார் 10 பேர்கள் இருந்தார்கள். சம்பவத்தன்று ஓட்டல் இயங்கி கொண்டிருந்தது. அந்த ஓட்டலில் சதிஷ்குமாரும், ஜனார்த்தனன் மட்டும்தான் வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள். புகார் வாக்குமூலத்தில் ஜனார்த்தனன் ஓட்டலில் வேலை பார்த்ததாகதான் கூறியுள்ளேன். புகார் வாக்குமூலத்தில் அவ்வாறு கூறவில்லை என்றால் சரிதான். ஜனார்த்தனன் ஓட்டலில் சமையல் வேலை செய்வார். அந்த ஓட்டல் சுமார் 50 பேர் உட்கார்ந்து சாப்பிடும் ஓட்டல் சரியல்ல, 10 பேர் மட்டுமே சாப்பிட முடியும். எதிரிகள் ஓட்டலுக்கு வந்து 10 நிமிடத்தில் சம்பவம் நடந்தது. எதிரிகளை ஓட்டலுக்கு வெளியே இருந்த நபர்கள்

தடுக்க முயற்சிக்கவில்லை, சத்தம் போட்டார்கள். ஓட்டலுக்கு ஒரே வழிதான் என்றால் சரியல்ல, இரண்டு வழிகள் உள்ளது. எதிரிகள் எந்த வழியாக சென்றார்கள் என்றால் தெரியாது. போலிசார் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். ஆய்வாளர் என்னை 25.08.2023 ஆம் தேதி பகல் 12.00 மணிக்கு விசாரித்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தபோது எதுவும் எழுதிக்கொள்ளவில்லை. ஆய்வாளர் என்னை சுமார்10 நிமிடம் விசாரித்தார். சம்பவத்தின்போது எனக்கு ஏற்பட்ட காயத்தால் சட்டை முழுவதும் இரத்தமானது. அதை போலிசாரிடம் கொடுத்தேன். சா.பொ1 அரிவாளை சம்பவத்திற்கு பிறகு சாட்சியம் அளிக்கும்போதுதான் பார்த்தேன். எதிரிகள் ஒட்டலுக்கு வந்து என்னோடு வாக்கு வாதத்தில் ஈடுப்பட்டார்களா என்றால் இல்லை. ஓட்டலில் சதிஷ்குமார் கல்லாவில் உட்கார்ந்திருந்தார், நாங்கள் பக்கத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். கல்லாவிற்கு முன்னால் 5 அடி அகலம் டேபிள் உள்ளது. எதிரிகள் ஓட்டலுக்குள் நுழைந்ததும் நாங்கள் எழுந்து நின்றுவிட்டோம். அப்போது ஜனார்த்தனன் எங்கள் பக்கத்தில்தான் இருந்தார். என் வீட்டிற்கும், அ.சா.3 ன் கடைக்கும் இடையே 1 1/2 கி.மீ தொலைவு இருக்கும். என் மகன் அ.சா.3 ன் கடைக்கு வரவில்லை. சம்பவ இடத்தில் இருந்து மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்சு மூலம் அழைத்து செல்லப்பட்டேன். 108 ஆம்புலன்சு எங்கு இருந்து வந்தது என்று எனக்கு தெரியாது. ஆம்புலன்சு சுமார் 8.30 மணிக்கு வந்தது. அ.சா.3ன் கடையில் இருந்து தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சுமார் 25 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். அ.சா.3ன் ஓட்டல் கடையில் இருந்து திருவையாறு அரசு மருத்துவமனையை தாண்டிதான் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு வரவேண்டும் என்றால் சரிதான். அ.சா.3ன் கடையில் இருந்து 3/4 கி.மீ தொலைவில் உள்ளது. நான் கோவில் குளத்தை மீன்பிடி ஏலம் எடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் பேரூராட்சி கவுன்சிலராக இருந்து கொண்டு ஏலம் எடுக்கமுடியாது என்றாலும், அவ்வாறு ஏலம் எடுத்தால் மாவட்ட ஆட்சியர் என் மீது நடவடிக்கை எடுப்பார் என்றால் சரியல்ல. பேரூராட்சி கவுன்சிலருக்கு கோவில் நிர்வாகமும், ஏலம் எடுக்க அனுமதிக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. போலிசார் ஏலம் சம்மந்தமாக கோவில் நிர்வாகத்திடம் விசாரிக்கவில்லை. 1வது எதிரி என்னை டேபிலை தாண்டி வெட்டவில்லை, அருகில் இருந்தே வெட்டினார். நான் இருக்கும் இடத்திற்கு வந்து வெட்டினார்கள். நான் நடுவில் உட்கார்ந்திருந்தேன். எனது வலதுப்பக்கத்தில் அப்பாசாமி உட்கார்ந்திருந்தார். ஜனார்த்தனன் எனது இடதுப்பக்த்தில் உட்கார்ந்திருந்தார். அ.சா.3 அப்பாசாமிக்கு பக்கத்தில் உட்கார்ந்திருந்தார். பிளாஸ்டிக் டேபில் இருவழி உள்ளது. 1வது எதிரி ஜனார்த்தனனை தாண்டி வந்துதான் வெட்டினார். ஜனார்த்தனனும் எழுந்துதான் நின்றுக்கொண்டிருந்தார். ஜனார்த்தனனுக்கு எந்தவித காயமும் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் 1வது எதிரியால் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த காயமும் ஏற்படவில்லை

என்றால் சரியல்ல. 1 வது எதிரியின் தாயார் அதிமுக கட்சி சார்பாக கவுன்சிலராக உள்ளார். அரசியல் காழ்புணர்ச்சியின் காரணமாக எதிரியின்மீது பொய் புகார் வாக்குமூலம் கொடுத்து பொய்யா சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலிசாரிடம் கொடுத்த புகார் மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னை வெட்டும்போது டேபிலின் மீது இரத்தம் படவில்லை தரையில் தான் இரத்தம் பட்டது. அ.சா.3 ன் ஓட்டலில் இரவு டிபன் உண்டு சம்பவத்தன்று இரவு டிபன் இருந்தது. நான் மீன்பிடி குளம் ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை என்றாலும்,குளத்தை ஏலம் எடுக்கவில்லை என்றாலும், பணம் ரூ.20000-1 வது எதிரியிடம் கொடுக்கவில்லை என்றாலும் , போலிசார் சொல்லி கொடுத்தவாறு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

(ஒ/ம்-G.சுந்தரராஜன், B.Sc., B.L.,)
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

S.C.No: 350/2025

Dated : 10.01.2026

Prosecution PW 2 திரு.அப்புசாமி

Accused A1,A3,A4,A5present. A2 died

குறுக்கு விசாரணை :

என்மீது கொலை வழக்கு இருந்து 1992 ஆம் வருடம் விடுதலை செய்யப்பட்டேன். கொலை வழக்கை தவிர வேறு வழக்கு எதுவும் என் மீது இல்லை. திமுக கட்சியில் உறுப்பினராக உள்ளேன். மீன்பிடி குளத்தை ஏலம் எடுக்க முன் தொகை எதுவும் கட்டவில்லை. முன் தொகை கட்டாமல் ஏலத்தில் கலந்து கொள்ளமுடியாது என்றால் சரிதான், நான் தூரத்தில் உட்கார்ந்திருந்தேன். ஏலத்தின்போது போலிஸ் பாதுகாப்பு இருந்தது என்றால் இல்லை. சம்பவத்தன்று திருவையாறில் 5 குளம் ஏலத்திற்கு வந்தது. கோவில் நிர்வாகத்தினர் நிறைய பேர்கள் இருந்தார்கள். 1 வது எதிரி ரூ.25000/- கேட்டபோது நான் சுமார் 30 அடி தொலைவில் நின்றுக்கொண்டிருந்தேன். அந்த இடைவெளியில் ஆட்கள் நிறைய பேர்கள் உட்கார்ந்திருந்தார்கள். 1 வது எதிரியிடம் ரூ.20000/- அ.சா.1 கொடுக்கும்போது அதே 30 அடி தொலைவில்தான் இருந்தேன். ஏலத்தில் கலந்துகொண்டபோது ஏற்பட்ட சலசலப்பு சம்மந்தமாக புகார் எதுவும் போலிசில் கொடுக்கவில்லை. திருவையாறு அரியலூர் மெயின் ரோடு வேறு, திருவையாறு விலாங்குடி மெயின்ரோடு வேறு என்றால் சரியல்ல. விலாங்குடியை தாண்டிதான் அரியலூர் செல்லவேண்டும். விலாங்குடி மெயின்ரோட்டிலே உள்ளது. மருத்துவரிடம் விலாங்குடி ஒயின்சாப் அருகில் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் வெட்டியதாக கூறியுள்ளேன் என்றால் துளசிராமன் வெட்டியதாக சொன்னேன். சம்பவம் சதிஷ்குமார் ஓட்டலுக்கு உள்ளே நடந்தது. அந்த ஒட்டல் சாப்பாடு, டிபன், டீ உள்ள ஓட்டல்தான். ஓட்டலுக்குள் சம்பவத்தன்று யாரும் சாப்பிடவில்லை. ஓட்டல் இரவு 10.00 மணி வரை இருக்கும். அ.சா.3 ன் ஓட்டல்தான் மெயின்ரோட்டில் உள்ள ஒரே ஓட்டல் என்றால் சரிதான். ஓட்டலில் அ.சா.3 கல்லாவில் உட்காரந்த்திருந்தார், நாங்கள் பக்கத்தில் உட்கார்ந்திருந்தோம். கல்லா டேபிள் சுமார் 3 அடி அகலம் இருக்கும். எனக்கு பக்கத்தில் அ.சா.1 உட்கார்ந்திருந்தார். ஜனார்த்தனன் அ.சா.1 ன் இன்னொரு பக்கத்தில் உட்கார்ந்திருந்தார். அ.சா.3 ன் கல்லாவிற்கும், எதிரே உள்ள ஜேர்களில் வரிசையாக உட்கார்ந்திருந்தோம். 1 வது எதிரி ஒட்டலுக்குள் நுழைந்ததும் 2 நிமிடம் நின்றுவிட்டு உடனே வெட்டினார். அ.சா.1 யை வலதுப்பக்கம் சதிஷ்குமார் பிடித்துக்கொண்டார், இடதுப்பக்கம் முருகானந்தம் பிடித்துக்கொண்டார். வெட்டுவதற்கு முன்பு இருவரும் கைகளை பிடித்துக்கொண்டார்கள். என்னை, இறந்துபோன செல்வமும், அருண்குமாரும் பிடித்துக்கொண்டார்கள். சதிஷ்குமாரையே, ஜனார்த்தனனையோ யாரும் பிடிக்கவில்லை, தடுக்கவும் இல்லை. எதிரிகள் வந்த உடனே நேரடியாக வெட்டினார்கள். சம்பவம் சுமார் 5,6

நிமிடம்தான் நடந்தது. ஓட்டல் வாசலில் யாரும் இல்லை. பக்கத்தில் 3 மீட்டர் தொலைவில் பொதுமக்கள் இருந்தார்கள். ஜனார்த்தனன் சமையல் வேலை செய்வார். ஓட்டலில் ஜனார்த்தனனை தவிர வேறு சமையல் ஆள் இல்லை. வெட்டுப்பட்டு என் சட்டையில் இரத்தம் பட்டது அதை போலிசாரிடம் கொடுக்கவில்லை. என்னை உதவி ஆய்வாளர் இரவு 10.30 மணிக்கு விசாரித்தார். என்னிடம் எழுதி வாங்கவில்லை. ஆய்வாளர் மறுநாள் 12.00 மணி வாக்கில் வந்து விசாரித்தார். ஆய்வாளர் என்னை விசாரித்து கையால் எழுதிக்கொண்டார்அதில் நான் கையெழுத்து போடவில்லை. ஆய்வாளர் சுமார் 10 நிமிடம் எழுதினார். நாங்கள் திருவையாறு அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை, நேரடியாக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்குதான் அழைத்து வரப்பட்டோம். 108 ஆம்புலன்சு இரவு 7.45 மணிக்கு சம்பவ இடம் வந்தது. சா.பொ.1 அரிவாளை சம்பவத்திற்கு பிறகு நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்கும்போதுதான் பார்க்கிறேன். என்னையும், மருத்துவமனைக்கு சதிஷ்குமார்தான் அழைத்துச்சென்றார். நான் மருத்துவமனையில் சேரும்போது சுயநினைவுடன் இருந்தேன். நான் முதல் விசாரணையில் சொன்னவாறு எனக்கோ, அ.சா.1 க்கிற்கோ எதிரிகளால் எந்த காயம் ஏற்படவில்லை என்றாலும், போலிசார் சொன்னதன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மீன்பிடி குளம் ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை என்றாலும், அ.சா.1 குளம் ஏலம் எடுக்கவில்லை என்றாலும், 1 வது எதிரியிடம் அ.சா.1 ரூ.20000 பணம் கொடுக்கவில்லை என்றாலும்,போலிசார் சொன்னதன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

(ஒ/ம்-G.சுந்தரராஜன், B.Sc., B.L.,)
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

S.C.No: 350/2025

Dated : 10.01.2026

Prosecution PW 3 திரு. சதிஷ்குமார்

Accused A1,A3,A4,A5present. A2 died

<u>குறுக்கு விசாரணை :</u>

என் ஓட்டலில் நானும், என் தம்பி ஜனார்த்தனனும், மற்றும் மாஸ்டர் ராகவன் ஆகியோர் வேலை பார்த்து வருகிறோம். சம்பவத்தன்று ராகவன் இல்லை. சம்பவத்தன்று ஓட்டலில் யாரும் சாப்பிடவில்லை. ஓட்டலில் சம்பவம் சுமார் 3 நிமிடம் நடந்தது. நான் ஓட்டலில் கல்லாவில் உட்கார்ந்திருந்தேன். அ.சா.1,2 மற்றும் ஜனார்த்தனன் எனக்கு எதிரில் உட்கார்ந்திருந்தார்கள். எனக்கு முன்னால்தான் கல்லா இருந்தது. ஜனார்த்தனன் எங்களுடன்தான் இருந்தார். என் ஓட்டல் இரவு 9.30 மணி வரை நடக்கும். இரவு 9.30 மணி வரை டிபன் உண்டு. மெயின் ரோட்டில் என் ஒரு ஒட்டல்தான், வேறு ஓட்டல் இல்லை. எதிரிகள் ஓட்டலுக்கு வந்ததும், 4,5 எதிரிகள் அ.சா.1 யை இருபுறமும் பிடித்துக்கொண்டார்கள். அ.சா.2 யை 2,3 எதிரிகள் இருபுறமும் பிடித்துக்கொண்டார்கள். கையை மட்டும்தான் பிடித்துக்கொண்டார்கள். நானோ, ஜனார்த்தனனோ அவர்களை தடுக்க முயற்சிக்கவில்லை. ஓட்டல் வாசப்படிக்கும் வெளியே 4,5 நபர்கள் இருந்தார்கள். வெட்டுப்பட்டவுடன் இரத்தம் டேபிலில் படவில்லை, தரையில் பட்டது. 1 வத் எதிரியின் தாயார் கவுன்சிலர் பதவிக்கு போட்டியிட்டப்போது அவரை எதிர்த்து நான்போட்டியிட்டேன். அதனால் எனக்கும், 1 வது எதிரிக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் நான் பேசுவிதில்லை. ஆய்வாளர் 25.08.2023 ஆம் தேதி என் ஓட்டலுக்கு வந்து விசாரித்தார்கள். இரத்தம் படிந்த கறையை எடுத்துக்கொண்டார்கள். சா.பொ.1 அரிவாளை சம்பவத்திற்கு பிறகு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போதுதான் பார்த்தேன். 108 ஆம்புலன்சு திருவையாறில் உள்ளது. விலாங்குடி கிராமம் மெயின் ரோட்டில் இருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. 25.08.2023 ஆம் தேதி கடை இல்லை, சம்பவம் நடந்த பிறகு கடையை என்னிடம் வாடகைக்கு விட்ட நபர் காலி பண்ண சொல்லிவிட்டார். தற்போது ஓட்டல் நான் எங்கும் வைக்கவில்லை. கடை உரிமையாளர் ஓட்டலை காலி செய்ய சொன்னதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 108 ஆம்புலன்சில் அ.சா.1,2 யை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன், மருத்துவரிடம் செல்லவில்லை, அவர்கள் மகன்கள் வந்துவிட்டார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், போலிசார் சொன்னதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் பார்வை மகசர் தயார் செய்யவில்ரை என்றாலும் அதில் ் நான் கையெழுத்து போடவில்லை என்றாலும் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒ/ம்-G.சுந்தரராஜன், B.Sc., B.L.,)
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம், தஞ்சாவூர்

S.C.No: 350/2025

Dated : 10.01.2026

Prosecution PW 4 திரு.பிரபு நாத்

Accused A1,A3,A4,A5present. A2 died

குறுக்கு விசாரணை :

நான் ஏலத்தில் கலந்து கொள்ள முன் தொகை எதுவும் கட்டவில்லை. என்னை போலிசார் விசாரிக்கவில்லை. ஏலத்தன்று நான் தூரத்தில் உட்கார்ந்திருந்தேன். நான் ஏலத்தில் உட்கார்ந்திருந்தேன், என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை. 1வது எதிரியிடம் அ.சா.1 ரூ.20000/- பணம் கொடுப்பதை நான் பார்த்தேன். சம்பவத்தின்போது நான் தஞ்சாவூர் புண்ணியமூர்த்தி பிள்ளை டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் வேலை பார்த்தேன். இரவு 9.30 மணி வரைடிபார்ட்மெண்ட் ஸ்டோர் இயங்கும். நான் இரவு 8.45 மணிக்கு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன். 23.08.2023 ஆம் தேதி நான் வேலைக்கு செல்லவில்லை. நான் வீட்டில் இருந்தேன். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், போலிசார் சொன்னவாறு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

(ஒ/ம்-G.சுந்தரராஜன், B.Sc., B.L.,)
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

S.C.No: 350/2025

Dated : 10.01.2026

Prosecution PW 5 திரு.இளங்கோவன்

Accused A1,A3,A4,A5present. A2 died

குறுக்கு விசாரணை :

போலிஸ் விசாரணையில் 2022 வருடம் குளத்தை ஏலம் எடுத்த 1 வது எதிரி துளசி என்பவர்தான் குளத்தில் ரூ.25000 மதிப்புள்ள மீன் விட்டதாக சொல்லி பணம் கேட்டதாக சொல்லவில்லை. நான் ஏலத்தில் கலந்து கொள்ள முன் தொகை கட்டவில்லை, என் அப்பாதான் கட்டினார். நான் ஏலத்தில் கலந்துகொண்டதாக கோவில் நிர்வாகம் கையெழுத்து பெறவில்லை. நான் மீன்பிடி குளம் எடுக்க கலந்துகொள்ளவில்லை என்பதால்தான் கையெழுத்து போடவில்லை போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 24.08.2023 ஆம் தேதி பொன்னவாரியில் உள்ள பேக்டரியில் வேலை பார்த்து கொண்டிருந்தேன். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், போலிசார் சொன்னவாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

(ஒ/ம்-G.சுந்தரராஜன், B.Sc., B.L.,)
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்